**C.C.No.264/2025**

**PW1 – மகாலெட்சுமி நாள் 30.04.2026**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது).

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

**Pre Charge evidence**

------------

**1, 2, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை எனது கையொப்பம் இல்லாமல் எதிரிகள் விற்றதாக சொல்லியுள்ளேன், மேலும் வெற்று தாளில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேன், ஆனால் நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பத்திரங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். நான் சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் உள்ள கையொப்பத்தையும், சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவேட்டில் உள்ள கையொப்பத்தை ஒப்பீட்டு பார்த்து நிபுணருக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள போது ஏதேனும் மனு தாக்கல் செய்து கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் எங்கள் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சில சொத்துக்கள் எங்கள் பூர்வீக சொத்து, சில சொத்து எனது தந்தையின் சுய சம்பாத்திய சொத்தாகும். இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள எந்தெந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் காளிகாப்பானில் உள்ள பூர்வீக சொத்துக்கள். எந்த சொத்துக்கள் எனது தந்தையின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் அயலாங்குடி, அனுப்பானடி, ராஜகம்பீரத்தில் உள்ள சொத்துக்கள் எனது தந்தையின் சொத்துக்கள்.

காளிகாப்பானில் உள்ள சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவண எண்.6–ல் பூர்வீக சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணம் எண்.6–ல் பஞ்சவர்ணத்திடமிருந்து புகார்தாரர் மற்றும் 1 முதல் 3 எதிரிகளின் தாயாரான கனகாம்மாள் கிரையம் பெற்றதாக தான் உள்ளது என்றால் சரிதான், கிரையம் வாங்கியதாக தான் உள்ளது. ஆவண எண்.6–ல் உள்ள காளிகாப்பானில் உள்ள சொத்து எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்து என்பதனால் அது சுயசம்பாத்திய சொத்து ஆகும், பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல, அது எனது தந்தையின் பூர்வீக சொத்து தான், அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

நான் எனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் நான் இளவராக இருந்த போது எனது தந்தை கூட்டுறவு வங்கியில் அவரது பூர்வீக சொத்தை அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன், அது பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது எத்தனாவது ஆவண எண்ணாக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. அடமானம் வைத்த சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் எனது காசோலையில் எதிரிகள் எனது கையொப்பம் செய்து வங்கியில் செலுத்தியதாக சொல்லியுள்ளேன், காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்பதற்கு கையொப்ப நிபுணரிடம் பரிசீலனை செய்ய அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எதிரிகள் போலி கையொப்பம் செய்த காசோலையின் எண்ணை எனது புகார் மனு அல்லது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் புகார் மனுவில் சொல்லவில்லை, ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி காசோலை எத்தனாவது ஆவணமாக இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு எந்த காசோலையும்

தாக்கல் செய்யவில்லை, தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்வது தெரிந்துவிடும் என்பதால் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் எவ்வளவு தொகை எதிரிகள் எடுத்தார்கள் என்றால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தொகை எடுத்தார்கள், அவர்களே பணத்தை போட்டு, அவர்களே எனது வங்கி கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது வங்கியில் ஒன்றரை லட்சம் சேர்த்து வைத்திருந்தேன், அது எதிரிகள் எனது காசோலையில் என்னுடைய கையொப்பத்தை போட்டு மேற்படி பணத்தை எடுத்துள்ளார்கள் என்று, வங்கியில் பணம் இல்லை என்று 1 முதல் 3 எதிரிகளிடம் கேட்டேன் என்று சொல்லியுள்ளேன், ஆனால் தற்போது எனது குறுக்கு விசாரணையில் அவர்களது பணத்தை அவர்களே வங்கியில் செலுத்தி அவர்களே எடுத்ததாக முன்னுக்குப்பின் முரணாக சொல்கிறேன் என்றால் என்னுடைய பணத்துடன் சேர்த்து அவர்களது பணத்தையும் எனது வங்கி கணக்கில் போட்டு அவர்களே எடுத்துக்கொண்டதாக தான் சொல்கிறேன்.

நான் மதுரை காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தபோது மேற்படி ஒன்றரை லட்சம் பணத்தை எதிரிகள் எடுத்துக்கொண்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த மனுவில் எதிரிகள் எனது பணத்தை மோசடி செய்து எடுத்துக்கொண்டதாகவும், கசோலையில் எனது கையொப்பத்தை மோசடியாக செய்து பணத்தை எடுத்துக்கொண்டதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நில அபகரிப்பு தனிப்பிரிவில் கொடுத்த மனுவை விசாரித்து அதில் எந்த குற்றமும் நடக்கவில்லை என்ற காரணத்தினால் முறையான விசாரணைக்கு பின்னர் அந்த மனு முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மனுவின் அடிப்படையில் புகாரினை தாக்கல் செய்தால் நீதிமன்றத்தில் ஏற்கப்படாது என்பதனால் மனுவில் சொல்லாத பொய்யான விபரங்களை சொல்லி இந்த புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் புகார் மனுவில் சொல்லியுள்ள சொத்து பரிமாற்றம் மற்றும்

கசோலையில் கையொப்பம் செய்த அனைத்தும் 2015-ம் ஆண்டுக்கு முன்பே நடந்தது என்றால் சரிதான். நான் எனது புகார் மனுவில் எதிரிகள் மோசடியாக கையொப்பம் செய்து சொத்துக்களை அபகரித்து எனக்கு எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு எதிரிகள் ராஜகம்பீரத்தில் 3 பிளாட் கொடுத்துள்ளார்கள். அந்த சொத்து எந்த வருடம், எப்படி கொடுத்தார்கள் என்றால் தானசெட்டில்மெண்ட் மூலம் கொரோனா காலக்கட்டத்தில் கொடுத்தார்கள். கொரோனா காலக்கட்டம் என்பது 2020 இருக்கும் என்றால் அதற்கு முன்னரே எதிரிகள் சொத்து கொடுத்தார்கள். 2018, 2019 காலக்கட்டத்தில் சொத்து கொடுத்தார்கள் என்றால் 2017, 2018 காலக்கட்டத்தில் இருக்கும். அந்த சொத்தை 1 முதல் 3 எதிரிகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பத்திரம் பதிவு செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது புகார் மனு மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் எனது சகோதரர்களான 1 முதல் 3 எதிரிகள் சொத்து தர முடியாது என்று மறுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம், நான் அவர்களை வற்புறுத்திதான் மேற்கூறிய சொத்தை பதிவு செய்து பெற்றுக்கொண்டேன். மேற்கூறிய சொத்தை தவிர 1 முதல் 3 எதிரிகள் எனது பெயரில் இன்னொரு வீடையும் பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த சொத்தை எனது தந்தை இறந்த பின்னர் தான் பதிவு செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த போதே எனக்கு விவசாய நிலத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் 1 முதல் 4 எதிரிகளை மிரட்டி சொத்தை பெறுவதற்காக எந்தவொரு ஆவணங்களும் இல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் எதிரிகள் வங்கி பரிமாற்றம் மற்றும் சொத்து பரிமாற்றத்தில் மோசடி செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. குற்றத்தன்மை இல்லாததால் அதற்கு ஆதரவாக ஆவணங்களும் இல்லாததால் தான் என்னை போலீசாரிடம் புகார் கொடுத்த போது ஏதேனும் தேவை ஏற்பட்டால் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய சொல்லி அறிவுறுத்தினார்

என்றால் சரியல்ல. எதிரிகள் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்து அவர்களை மனரீதியாக துன்புறுத்த வேண்டும் என்பதற்காக இப்புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்தவொரு முகாந்திரமும் இல்லாததால் இப்புகார் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

**3–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**